**சார்பு நீதிமன்றம், திருவைகுண்டம்.**

**நாள் : 29.01.2025**

**வழக்கு எண் : OS. 54/2023**

**சாட்சி பெயர் : திருமதி.சரோஜினி செல்வராணி / DW.1**

**குறுக்கு விசாரணை**

1. இறந்து போன பாக்கியத்தாயம்மாள் எனது மாமியார் ஆவார்.
2. பி.வா.சா.ஆ.1 ஆவணம் எழுதியது எனக்கு நேரடியாக தெரியாது.
3. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்த இரண்டு நபர்களும் பயனார்களுடைய கணவர்கள் என்றால் சரிதான்.
4. பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணம் எனது வீட்டுக்காரர் ஜெயமாணிக்கம், வளர்மதி, கலாமணி வசந்தா ஆகியோர்களுக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது. மேற்சொன்ன மூன்று நபர்களுடன் சுமூக உறவு உள்ளது என்றால் சரியல்ல.
5. பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தின் அசல் ஆவணம் கலாமணி வசந்தா வசம் உள்ளது. மேற்சொன்ன உயில் ஆவணம் கலாமணி வசந்தாவிடம் உள்ளது என்று பிராதில் சொல்லவில்லை என்றாலும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய கோரியும் பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான்.
6. பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் இன்னார் என்று நிரூபித்தவரிகளில் 1.பொன்னுதுரை எனது சித்தாப்பா 2.சுந்தரராஜ் எனது மாமா ஆவார்கள். மேற்சொன்ன இரண்டு நபர்களும் தற்போது உயிருடன் இல்லை. அவர்களுக்கு வாரிசுகள் உண்டு.
7. பாக்கியத்தாயம்மாள் அவர்களின் வங்கியில் உள்ள வைப்பீடுகள் மற்றும் பண பலன்கள் அனைத்தையும் எனது கணவர்தான் வாங்கினார். பாக்கியத்தாயம்மாள் வாரிசு என்ற அடிப்படையில் வழக்கில் உள்ள அனைவருக்கும் உரிமை உள்ளது என்றால் சரிதான்.
8. பாக்கியத்தாயம்மாள் அவர்களின் வங்கியில் உள்ள வைப்பீடுகள் மற்றும் பண பலன்கள் அனைத்தையும் எடுப்பதற்கு எந்த ஆவணங்களை எனது கணவர் தாக்கல் செய்து பெற்றார் என்ற விபரம் எனக்குத்தெரியாது.
9. எனது திருமணம் 1989 ஆம் ஆண்டு நடைபெற்றது. பாக்கியத்தாயம்மாளுக்கு இரண்டு ஆண் குழந்தைகள். மூத்த மகனுக்கு எனக்கு முன்பே திருமணமாகிவிட்டது.
10. பாக்கியத்தாயம்மாளுக்கு க.எண்.9/5 எண் கொண்ட வீடு உள்ளது என்றால்

சரிதான்.

11. திருமணமான காலத்தில் பாக்கியத்தாயம்மான் அவரது மகன்கள், அவர்களின் குடும்பத்தார்கள் அனைவரும் ஒன்றாக வசித்து வந்தார்கள்.

12. எனது கணவர் முதலில் அஞ்சல் துறையில் பணிபுரிந்தார். பின்பு அரசு டாஸ்மாக்கில் பணிபுரிந்தார்.

13. எனக்கும் எனது கணவருக்கும் விவாகரத்து வழக்கு நடைபெற்றது. அதன் வழக்கு எண்.IDOP 162/2006 ஆகும். அந்த வழக்கில் எனது கணவர் மது அருந்துவார் என்றும் பெண்களுடன் தொடர்பு அரசு வேலையில் மோசடியாக பணி நீக்கம் செய்யப்பட்டவர் உட்பட பல குற்றச்சாட்டுகள் சுமத்தியுள்ளேன் என்றால் சரிதான்.

14. பேசிக் தியாகராஜன் என்பவர் ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்தார். சுயமாக சம்பாதித்து எவ்வித சொத்துக்களும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

15. எனது கணவருக்கு அவருடைய தந்தை 1986 ல் நன்கொடை பத்திரமாக அவரது வீட்டை எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். அந்த வீட்டின் சிறு பகுதியை கடந்த 2016 ஆம் ஆண்டு இந்த வழக்கின் 1வது வாதி பொன்ராணி கிரையமாக வாங்கினார் என்றால் சரிதான். ஆனால் 2017 ல் பதிவு செய்யப்பட்டது.

16. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் SRO copy– ஆகும். **அது வா.சா.ஆ.17 ஆவணமாகும்.** அதில் உள்ள கையொப்பம் என்னுடைய கணவருடையது என்றால் சரிதான்.

17. பி.வா.சா.ஆ.2 ஆவணம் நான் தாக்கல் செய்த உயில் ஆவணத்தில் நான் நோயினால் பாதிக்கப்பட்ட எழுந்து நடமாட முடியாமல் படுக்கையில் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றாலும் பி.வா.சா.ஆ.2 ஆவணம் எங்கு பதியப்பட்டது என்று நான் தெரிந்து கொண்டேன். அது பெருங்குளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்டது. யாரெல்லாம் சென்றார்கள் என்ற விபரம் எனக்குத்தெரியாது.

18. பி.வா.சா.ஆ.2 ஆவணத்திற்கான விபரங்கள் வீட்டில் வைத்து சொல்லப்பட்டது. என்னை யாரும் அழைத்து செல்லவில்லை வீட்டில் வைத்து பதியப்பட்டது. அப்போது யாரெல்லாம் இருந்தார்கள் என்று எனக்குத்தெரியாது.

19. பி.வா.சா.ஆ.2 ஆவணம் யார் மூலமாக தட்டச்சு செய்து தயாரிக்கப்பட்டது என்ற விபரம் எனக்குத்தெரியாது.

20. பி.வா.சா.ஆ.2 ஆவணம் எழுதப்பட்ட காலத்தில் எனது கணவர் வீட்டில்தான்

இருந்தார்.

21. பி.வா.சா.ஆ.2 ஆவணமானது பிறப்பிக்கப்படும் போது எனது கணவர் உடனிருந்தார். பி.வா.சா.ஆ.2 ஆவணமானது எழுதப்பட்டு மூன்று நாட்களில் பாக்கியத்தாயம்மாள் காலமானார் என்றால் சரிதான்.

22. பி.வா.சா.ஆ.2 ஆவணமானது ஒரு சான்றிட்ட நகலாகும். அதில் பல திருத்ததங்கள் இருப்பது தெரியவருகிறது. இந்த திருத்தங்கள் பற்றி தெரியவேண்டும் என்றால் அசல் ஆவணத்தை ஆஜர் செய்தார் தெரியவரும்.

23. தாவா பிராதில் காண்பிக்கப்பட்டுள்ள இரண்டாவது அயிட்ட சொத்து பி.வா.சா.ஆ,2 உயில் ஆவணத்தில் உட்படுத்தப்படவில்லை என்றால் சரிதான்.

24. எனது கணவருக்கு 1986ல் நன்கொடை கொடுத்த பிறகு, 1989ல் பேசிக் தியாகராஜன் என்பவருக்கு பிராது தபசில் 1வது தபசில் சொத்தை எழுதிக்கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்குத்தெரியாது.

25. பி.வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் தபசில் விபரத்தில் பேசில் தியாகராஜன் இடத்திற்கு மால்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

26. பேசில் தியாகராஜன் என்பவருக்கு பாக்கியத்தாயம்மாள் 1வது தபசில் சொத்துக்களை எழுதிக்கொடுத்துள்ளார் என்ற விபரம் தற்போது எனக்கு தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

27. பி.வா.சா.ஆ,2 உயில் ஆவணம் எழுதப்படும் போது பாக்கியத்தாயம்மாள் நல்ல மனநிலையிலும், திடகாத்திரமாகவோ, சுயசிந்தனையோ இல்லை என்றால் சரியல்ல.

28. நாங்கள் கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவர்கள்.

29. பி.வா.சா.ஆ.2 உயில் ஆவணம் பிறப்பித்த விபரம் 2006 ஆம் வருடம் எனது கணவர் சொல்லிதான் எனக்குத்தெரியும். மேற்சொன்ன உயில் ஆவணத்தை ஊர்ஜிதப்படுத்துவதற்கு நானோ எனது கணவரோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

30. பிராது 1வது தபசில் சொத்துக்கள் அனைத்தும் தோட்டங்கள் என்றால் முன்னாடி தோட்டமாகவும் தற்போது பராமரிப்பு இல்லாமல் உடங்காடாக உள்ளது.

31. என்னிடம் காண்பிக்கப்படுவது 1689ல் ஏற்படுத்தப்பட்ட பதிவு பெறாத கிரைய ஒப்பந்தத்தில் அசல் ஆவணம் ஆகும். அதில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடைய கணவரின் கையொப்பம் என்றால் சரிதான். **மேற்சொன்ன ஆவணத்தில் உள்ள என் கணவரின் சாட்சி கையொப்பம் மட்டும் வா.சா.ஆ.18 ஆகும்.** மேற்சொன்ன ஆவணத்தில் உள்ள இரண்டு பக்கங்களில் உள்ள

எழுதிக்கொடுத்தவரின் கையொப்பங்கள் பாக்கியத்தாயம்மாளின் கையொப்பங்கள் ஆகும். **அந்த கையொப்பங்கள் இரண்டும் வா.சா.ஆ.19 மற்றும் வா.சா.ஆ.20 ஆகும்.**

32. நான் பத்திரப்பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற அரசு ஊழியர் ஆவேன்.

33. பி.வா.சா.ஆ.2 உயில் ஆவணமானது எனது பதவியின் அதிகாரத்தை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட ஆவணம் என்பதால் அந்த ஆவணமானது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

34. எனது மாமனார் இறப்பிற்கு பிறகு எனது கணவர் இறந்து போன பாக்கியத்தாயம்மாளின் கையில் எடுத்துக் கொண்டு போலியான உயில் ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல.

35. பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணமானது சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏற்படுத்தப்படவில்லை அதனால் என்னால் அதுகுறித்து எந்த உரிமையும் கோர இயலாது என்றாலும் அந்த உயில் ஆவணம் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

K NAMBIRAJAN

Digitally signed by K NAMBIRAJAN
Date: 2025.01.29 18:04:03 +0530

**சார்பு நீதிபதி,**
**திருவைகுண்டம்**